தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

ஆனந்த பாஸ்கர்
PRGI No: TNMUL/25/A1387
உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்
ANANDA BHASKAR
www.anandabhaskar.com




சென்னை மலர்: 01 இதழ்: 153 28.11.2025 வெள்ளிக்கிழமை
Chennai Volume: 01 Issue: 153 Friday pages 4 Rs.5/-

## இன்றைய நாள்

வெள்ளிக்கிழமை
(28-11-2025)
விசுவாவசு ஆண்டு, கார்த்திகை-12

பிறை: வளர்பிறை

திதி
அஷ்டமி இரவு 7.16 வரை
பிறகு நவமி.

நட்சத்திரம்:
சதயம் இரவு 10.45 வரை
பிறகு பூரட்டாதி

யோகம்
சித்தயோகம்

ராகுகாலம்
காலை 10.30-12.00 மணி.

எமகண்டம்
பிற்பகல் 3.00 - 4.30 மணி.

சூலம் -மேற்கு.

நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 5-6 மணி

| | |
|---|---|
| மேஷம் | உயர்வு |
| ரிஷபம் | செலவு |
| மிதுனம் | போட்டி |
| கடகம் | வரவு |
| சிம்மம் | வெற்றி |
| கன்னி | களிப்பு |
| துலாம் | கடமை |
| விருச்சிகம் | அன்பு |
| தனுசு | ஆதரவு |
| மகரம் | நன்மை |
| கும்பம் | பரிசு |
| மீனம் | உதவி |

# தவெகவில் இணைந்தார் செங்கோட்டையன்!

**சென்னை,நவ.28:**

அதிமுக மூத்த தலைவரும் முன்னாள் அமைச்சருமான கே.ஏ.செங்கோட்டையன் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தார்.

அதிமுகவிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன், தனது கோபிசெட்டிப்பாளையம் சட்டப்பேரவை உறுப்பினர் பதவியை புதன்கிழமை ராஜிநாமா செய்தார்.

இதனைத் தொடர்ந்து, சென்னை பட்டினம்பாக்கத்தில் உள்ள தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய்யின் வீட்டுக்கு நேற்று மாலை நேரில் சென்ற செங்கோட்டையன், விஜய்யை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்த நிலையில், சென்னை பனையூரில் இன்று நடைபெற்ற நிகழ்வில், தவெக தலைவர் விஜய் முன்னிலையில் தவெகவில் இணைந்துள்ளார்.

திருப்பூர் முன்னாள் எம்பி சத்யபாமா உள்பட செங்கோட்டையனின் ஆதரவாளர்களும் தவெகவில் இணைந்துள்ளனர்.

முன்னதாக பனையூர் தவெக அலுவலகத்துக்கு வருகைதந்த செங்கோட்டையன் மற்றும் அவரது ஆதரவாளர்களை



தவெக பொதுச் செயலாளர் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா உள்ளிட்டோர் வரவேற்று அழைத்துச் சென்றனர்.

தவெகவில் இணைந்துள்ள செங்கோட்டையனுக்கு தவெக நிர்வாகக் குழுவின் தலைமை ஒருங்கிணைப்பாளர் பதவி கொடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 1977 ஆம் ஆண்டு தமிழக முதல்வராக எம்ஜிஆர் பதவியேற்ற போது, முதல்முறையாக கோபிசெட்டிபாளையம் தொகுதியில் போட்டியிட்டு, சட்டப்பேரவை உறுப்பினர் ஆனார் செங்கோட்டையன்.

எம்ஜிஆரின் விசுவாசியாகவும், தொடர்ந்து முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் விசுவாசியாகவும் அறியப்பட்ட செங்கோட்டையன், கோபிசெட்டிபாளையம் தொகுதியிலிருந்து மட்டும் 8 முறை சட்டப்பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜெயலலிதாவின் பிரசாரப் பயணத்தை திட்டமிடுவதில் வல்லவராக அறியப்பட்ட செங்கோட்டையன், அவரது மறைவுக்குப் பிறகு பிரிந்த அதிமுக ஒருங்கிணைய வேண்டும் என்கிற கருத்தை முன்வைத்தார்.

கடந்தமாதம்பசும்பொன்னில் நடைபெற்ற தேவர் ஜெயந்தி விழாவில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், அமமுக பொதுச் செயலர் டி.டி.வி.தினகரன், வி.கே.சசிகலா ஆகியோரைச் சந்தித்தார். இதையடுத்து, அவரை கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்து நீக்கி அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி நடவடிக்கை எடுத்தார்.

அதன் பின்னர், செங்கோட்டையனின் அரசியல் நகர்வு எந்த மாதிரியாக இருக்கும் என்கிற எதிர்பார்ப்பு எழுந்த நிலையில், விஜய் தலைமையிலான தவெகவில் இணைந்துள்ளார்.

தமிழக அரசியலில் அரை நூற்றாண்டு அனுபவமும், தேர்தல் பிரசாரங்களை ஒருங்கிணைக்கும் ஆளுமையும் படைத்தசெங்கோட்டையனின் வருகை தமிழக வெற்றிக் கழகத்துக்கு கூடுதல் பலத்தை சேர்த்துள்ளது.

## செங்கோட்டையனுக்கு பதவியை அறிவித்தார் விஜய்



தவெக உயர்மட்ட மாநில நிர்வாகக் குழுவின் தலைமை ஒருங்கிணைப்பாளராக செங்கோட்டையனை நியமித்து கட்சியின் தலைவர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

கூடுதலாக ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களுக்கு அமைப்புச் செயலாளராகவும் செங்கோட்டையன் நியமிக்கப்பட்டுள்ளார்.


விஜய் தனது அறிக்கையில்,

"தமிழ்நாட்டின் இருபெரும் தலைவர்களோடு பயணித்தவர்: தாம் சார்ந்திருந்த கழகத்தின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றியவர்; அனைவரிடத்திலும் எளிமையோடும் அன்போடும் பண்போடும் பழகி, நன்மதிப்பைப் பெற்றவர்; மூத்த அரசியல் தலைவர். முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் இன்று முதல் நம் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்து, மக்களுக்கான அரசியலில் நம்மோடு பயணிக்க இருக்கிறார். அவரை வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அண்ணன் செங்கோட்டையன், ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட 28 பேர் கொண்ட, எனது கண்காணிப்பில் இயங்கும் கழக உயர்மட்ட மாநில நிர்வாகக் குழுவின் தலைமை ஒருங்கிணைப்பாளராக (CHIEF COORDINATOR) நியமிக்கப்படுகிறார். இவர் இக்குழுவை வழிநடத்தி, கழகத்தின் அரசியல் செயல்பாடுகளை முன்னெடுக்க எனக்கு உறுதுணையாகச் செயல்படுவார். மேலும், அவருடன் தமிழக வெற்றிக் கழகத்தில் தங்களை இணைத்துக்கொண்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சத்தியபாமா, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் வெங்கடாசலம், முத்துக்கிருஷ்ணன் மற்றும் பிற புதிய உறுப்பினர்களையும் வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கழகத் தோழர்களும் நிர்வாகிகளும் இவர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்" என்று பதிவிட்டுள்ளார்.

## நம் ஜென்ஸீ தலைமுறையினர் புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குகிறார்கள்

### பிரதமர் மோடி பெருமிதம்



**புதுடெல்லி,நவ.28:**

"நம் ஜென்ஸீ பொறியாளர்கள், வடிவமைப்பாளர்கள், கோடிங் பணிகளை மேற்கொள்பவர்கள், விஞ்ஞானிகள் ஆகியோர் புதிய தொழில்நுட்பங்களை உருவாக்கி வருகிறார்கள்" என்று பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத்தில், இந்திய விண்வெளி ஸ்டார்ட் அப் நிறுவனமான ஸ்கைரூட்டின் இன்ஃபினிடி வளாகத்தை வீடியோ கான்ஃபரன்சிங் முறையில் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

மேலும், ஸ்கைரூட்டின் முதல் சுற்றுப்பாதை ராக்கெட்டான விக்ரம்-1ஐ அவர் அறிமுகப்படுத்தினார். பின்னர் நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, "இந்திய இளைஞர்கள் நாட்டின் நலன்களுக்கு முன்னுரிமை கொடுக்கிறார்கள். அவர்கள் எந்த ஒரு வாய்ப்பையும் புத்திசாலித்தனமாக பயன்படுத்துகிறார்கள்.

அரசாங்கம் விண்வெளித் துறையை தனியாருக்கு திறந்தபோது நாட்டின் இளைஞர்கள், குறிப்பாக ஜென்ஸீ இளைஞர்கள் அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முன்வந்தனர். தற்போது 300-க்கும் மேற்பட்ட ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் இந்தியாவின் விண்வெளி எதிர்காலத்துக்கு புதிய நம்பிக்கையைத் தருகின்றன.

இன்று ஜென்ஸீ பொறியாளர்கள், வடிவமைப்பாளர்கள், கோடிங் பணிகளை மேற்கொள்பவர்கள், விஞ்ஞானிகள் ஆகியோர் புதிய தொழில்நுட்பங்களை உருவாக்கி வருகிறார்கள். ராக்கெட் நிலைகள், செயற்கைக்கோள் தளங்கள் என ஒவ்வொன்றிலும் அவர்கள் புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குகிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு கற்பனை செய்ய முடியாத துறைகளில் இன்று இந்திய இளைஞர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

இந்தியாவின் தனியார் விண்வெளி திறமை உலகளாவிய முதலீட்டாளர்களுக்கு ஒரு கவர்ச்சிகரமான இடமாக மாறி வருகிறது.

இன்று விண்வெளித் துறையில் நாடு முன் எப்போதும் இல்லாத வாய்ப்புகளைக் காண்கிறது. ஸ்கைரூட்டின் இன்ஃபினிடி வளாகம், புதிய சிந்தனை, புதுமை மற்றும் இளைஞர் சக்தியின் பிரதிபலிப்பாகும்.

நமது இளைஞர்களின் புதுமை, திறன், தொழில்முனைவு ஆகியவை புதிய உயரங்களைத் தொடுகின்றன. இன்றைய நிகழ்வு எதிர்காலத்தில், உலக அளவில்செயற்கைக்கோள்களை ஏவுவதில் இந்தியா தலைவராக உருவெடுக்கும் என்பதைக் காட்டுகிறது.

இந்தியாவின் விண்வெளிப் பயணம் வரையறுக்கப்பட்ட வளங்களுடன் தொடங்கியது. ஆனால், நமது லட்சியங்கள் ஒருபோதும் மட்டுப்படுத்தப்படவில்லை. ராக்கெட்டின் ஒரு பகுதியை சைக்களில் எடுத்துச் சென்றதில் இருந்து உலகின் மிகவும் நம்பகமான ஏவுகணை வாகனம் வரை மிகப் பெரிய உயரங்களை இந்தியா அடைந்துள்ளது.

நம்பகத்தன்மை, திறன், மதிப்பு ஆகியவற்றுடன் இந்தியா தனது சொந்த அடையாளத்தை உருவாக்கி உள்ளது. இந்திய விண்வெளிப் பயணத்துக்கு இஸ்ரோ பல பத்தாண்டுகளாக ஒரு புதிய பாதையை உருவாக்கிக்கொடுத்துள்ளது" என தெரிவித்துள்ளார்.

## சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் புகழ் ஓங்குக!



**சென்னை,நவ.28:**

தமிழ்நாட்டுக்கும் அவருக்கும் இருக்கும் உறவின் வெளிப்பாடாக உயர்ந்து நிற்கிறது 2023-ஆம் ஆண்டு இதே நாளில் நான் திறந்து வைத்த வி.பி.சிங் அவர்களின் முழுவுருவச் சிலை!

#EWS, #NEET என விதவிதமான வழிகளில் சமூகநீதியைக் குழிதோண்டிப் புதைக்கும் ஆட்சியாளர்கள் ஒன்றியத்தில் இருக்கும்போது வி.பி.சிங் போன்ற பிரதமரை இன்னும் கூடுதலாகவே 'Miss' செய்கிறோம்.

சொல்லிலும் செயலிலும் தமிழர்களின் நண்பராக விளங்கிய முன்னாள் பிரதமர் விஸ்வநாத பிரதாப் சிங் அவர்களது நினைவுநாளில் அவரது சமூகநீதிச் சாதனைகளைப் போற்றி வணங்குகிறேன்! என்று கூறியுள்ளார்.

## சொத்து குவிப்பு வழக்கு அமைச்சர் பெரியகருப்பன் விடுதலை

**சென்னை,நவ.28:**

சொத்து குவிப்பு வழக்கில் இருந்து கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் மற்றும் அவரது குடும்பத்தினரை விடுதலை செய்து சிவகங்கை மாவட்ட குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2006ம் ஆண்டு முதல் 2011ம் ஆண்டு வரை பெரிய கருப்பன் அறநிலையத்துறை அமைச்சராக இருந்தபோது வருமனத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக வழக்கு தொடரப்பட்டது.

அதில், ரூ.1.2 கோடி சொத்து சேர்த்ததாக லஞ்ச ஒழிப்புத்துறை தொடர்ந்த வழக்கில் பெரியகருப்பனை சிவகங்கை நீதிமன்றம் விடுதலை செய்தது.


## உருவானது டிட்வா புயல்: அதி கனமழை எச்சரிக்கை!

**சென்னை,நவ.28:**

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய இலங்கை பகுதிகளில் டிட்வா புயல் உருவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

(26-11-2025) தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு இலங்கை - இந்திய பெருங்ககடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, நேற்று நள்ளிரவு (23.30 மணி அளவில்) காற்றழுத்த தாழ்வு மண்டலமாக, தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய இலங்கைகடலோரப்பகுதிகளில் வலுப்பெற்று, இன்று (27-11-2025) காலை 5.30 மணியளவில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மேலும் வலுப்பெற்று நிலையில், தற்போது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் 'டிட்வா' புயலாக உருவானது.

இது இலங்கை அம்பாந்தோட்டையிலிருந்து, கிழக்கு-வடகிழக்கே சுமார் 130 கிலோ மீட்டர் தொலைவிலும், இலங்கைமட்டக்கிளப்பிலிருந்து



தெற்கு- தென்கிழக்கே 120 கிலோ மீட்டர் தொலைவிலும், புதுவையிலிருந்து தெற்கு-தென்கிழக்கே 600 கிலோ மீட்டர் தொலைவிலும், சென்னையிலிருந்து தெற்கு-தென்கிழக்கே 700 கிலோ மீட்டர் தொலைவிலும் நிலை கொண்டுள்ளது.

அடுத்த 48 மணி நேரத்தில் வடக்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து தென்மேற்கு வங்கக்கடல் வழியாக டிக்வா புயல் நகரும். நவ.30ல் வட தமிழகம், புதுவை, தெற்கு ஆந்திர கடலோர பகுதிகளை நோக்கி நகரக்கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

நேற்று 27ல் தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், பலத்த தரை காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இன்று நவ.28ல் நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர்மற்றும்புதுக்கோட்டை ஆகிய நான்கு மாவட்டங்களில் கன முதல் மிக கனமழையும், ஓரிரு இடங்களில் அதி கனமழையும் பெய்யக்கூடும்.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS

| | |
|---|---|
| ➤ Public Notice | ➤ Loss of Share |
| ➤ Legal Notice | ➤ Merger |
| ➤ Tender Notice | ➤ Acquisition |
| ➤ Society Notice | ➤ AFR, UFR, etc. |

for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com





மதுரை வடக்கு மாசி வீதி இராமாயண சாவடி முன்பு மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா 51வது வட்ட திமுக நிர்வாகிகளால் இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.

## வலங்கைமான் லாயம் பகுதியில் பேரூர் இளைஞர் அணி சார்பில் திமுக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா.



**வலங்கைமான்,நவ.28:** திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் பேரூராட்சி 1-வது வார்டு லாயம் பகுதியில் திமுக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு பேரூர் திமுக இளைஞர் அணி சார்பில் பிறந்த நாள் விழா நடைபெற்றது. நிகழ்வில் வலங்கைமான் பேரூர் திமுக செயலாளர் பா.சிவநேசன் கலந்து கொண்டு கேக் வெட்டி மாணவர்கள், பொதுமக்களுக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது மற்றும் மாணவர்களுக்கு நோட்டு, பேனா, பென்சில், ரப்பர் உள்ளிட்ட எழுது பொருட்கள் வழங்கப்பட்டது. நிகழ்வில் ஒன்றிய பிரதிநிதி சிங்குதெரு ராஜேஷ்,வலங்கைமான் பேரூர் இளைஞர் அணி அமைப்பாளரும், பேரூராட்சி 1- வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினருமான செல்வமணி, பேரூர் திமுக துணை செயலாளர் இரமேஷ், வார்டு செயலாளர் செழியன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள், மாணவ, மாணவிகள் திரளாக கலந்து கொண்டனர்.

## திருவோணம் சுவாமி புறப்பாடு



தஞ்சாவூர் மகர்நோம்புச்சாவடி V.P. கோவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீஅலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாளுக்கு நேற்று (26.11.2025) திருவோணத்தை முன்னிட்டு காலை திருமஞ்சனம் கண்டருளால், மாலை சுவாமி ஆஸ்தான புறப்பாடு சிறப்பாக நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள் மற்றும் உபயதாரர் பஜ்ஜி ஜெயராம் குடும்பத்தார் செய்து இருந்தனர்.

## மானாமதுரை நகராட்சியில் தேர்வு பெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு நியமன கவுன்சிலர் பதவிப்பிரமாணம் செய்து வைப்பு



**சிவகங்கை, நவ.28 :** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி அலுவலகத்தில் மாற்றுத்திறனாளி ஜஸ்டின் திரவிய புஷ்பராஜுக்கு நியமன உறுப்பினராக தேர்வு செய்து பதவி பிரமாணம் செய்து வைத்தனர். தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு நியமன கவுன்சிலர் பதவி அளிக்க அரசு உத்தரவிட்டுஉள்ளது. மாற்றுத்திறனாளிகள், தேர்தலில் போட்டியிடாமல் நியமன முறையில் உள்ளாட்சியில் பதவிகளை பெறும் வகையில், சட்டசபையில் மசோதா தாக்கல் செய்யப்பட்டதுஅதன்படி, தற்போது அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளிலும், தலா ஒரு தகுதியான மாற்றுத்திறனாளி நபருக்கு, நியமன கவுன்சிலர் பதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சியில் நியமன உறுப்பினராக மாற்றுத்திறனாளியான ஜஸ்டின் திரவிய புஷ்பராஜ் தேர்வு செய்யப்பட்டார் அவருக்கு நகராட்சி ஆணையர் கோபாலகிருஷ்ணன் நகர் மன்ற தலைவர் முன்னாள் எம்எல்ஏ மாரியப்பன் கென்னடி ஆகியோர் பதவி பிரமாணம் செய்து வைத்தனர் நிகழ்ச்சியில் மானாமதுரை எம்எல்ஏ தமிழரசி, நகராட்சி கவுன்சிலர்கள் மாற்றுத்திறனாளி சங்கத்தினர் ஆகியோர் வாழ்த்து தெரிவித்தனர்.

## இளையான்குடியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா




**சிவகங்கை, நவ.28** சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் தமிழக துணை முதல்வர் இளந்தலைவர் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு இளையான்குடி லிட்டில் ஸ்டார் கிண்டர் கார்டன் பள்ளியில் குழந்தைகள் அனைவருக்கும் இனிப்பு வழங்கி மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது. விழாவில் திமுக சிவகங்கை மாவட்ட பிரதிநிதிகள் டிஎம்ஏ யாசின், செய்யது கான், மாணவரணி பேரூர் அமைப்பாளர் முகமது பேரூர் அமைப்பாளர் முகமது முஃபீத் இளையான்குடி முன்னாள் பேரூராட்சி தலைவர் கவுன்சிலர் செய்யது ஜமீமா பள்ளி ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அதிக அளவில் ரத்த தானம் முகாம் சமூக சேவகர் அப்துல் மாலிக்கை பாராட்டி விருது



**சிவகங்கை, நவ.28** சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பேரூராட்சி பகுதியில் லட்சக்கணக்கான மர கன்றுகளை வைத்து பராமரித்து வரும் சமூக சேவகர் அப்துல் மாலிகை பாராட்டி தேசிய தன்னார்வ இரத்ததானம் தினம் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது . அதில் மாவட்ட ஆட்சியர்பொற்க்கொடி அதிக இரத்ததானம் அதிக இரத்ததானம் முகாம்கள் நடத்தியதற்கு இளையான்குடி சமூக ஆர்வலர் அப்துல் மாலிக்கை பாராட்டி விருது மற்றும் சான்று வழங்கினார். என்னை தேர்வு செய்தமதிப்புக்குரிய மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் அரசு இரத்த வங்கிக்கும் சமூக ஆர்வலர் அப்துல் மாலிக் அவர்கள் நன்றி கூறினார்.



பொள்ளாச்சி நவம்பர்- 27 ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நம் வாசவி அம்மன் அபிஷேகம், அலங்காரங்கள், வண்ண மலர் மாலைகளுடன், வெற்றிவேர் மாலையுடன், தங்க ஆபரணங்களுடன் சிறப்பு அலங்காரத்தில் நம் வாசவி அம்மன் அருள் பாலிக்கும் காட்சி.



எக்விடாஸ் குருகுல்மேல்நிலைப்பள்ளி திருச்சியில் இந்திய அரசியலமைப்பு தினமான நவம்பர் 26ம் நாளான இன்று இந்திய அரசமைப்பு பற்றிய உறுதிமொழியினை மேல்நிலைப்பள்ளி மாணவர்களும் ஆசிரியர்களும் எடுத்துக் கொண்டனர்.

## பிறந்தநாளை முன்னிட்டு



தமிழ்நாடு துணை முதலைமைச்சரும்,திமுக இளைஞரணி தலைவருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு,நிலக்கோட்டை வடக்கு ஒன்றிய திமுக சார்பில் செம்பட்டியில் ஒன்றிய செயலாளர் வழகறிஞர் சௌந்தரபாண்டியன் தலைமையில் ஏராளமான திமுகவினர் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்,உடன் திமுக நிர்வாகிகள் அழகேசன், ஆரோக்கியம்,அண்ணாதுரை,செம்பர்சுரேஷ், பதினெட்டாம்படி,டெனிட், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வேலூர் ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோயிலில் தவெக அன்னதானம் வழங்கல்!



**வேலூர், நவ. 28:** வேலூர்ஸ்ரீஜலகண்டேஸ்வரர் கோவிலில் இருந்து திருவண்ணாமலை தீபத் திருவிழாவுக்கு திருக்குடை ஊர்வலம் நடந்தது. இதில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு தமிழக வெற்றிக் கழக மாவட்ட செயற்குழு உறுப்பினர் வினோத் கண்ணா ஏற்பாட்டில் ஐநூறு பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் மாவட்ட செயலாளர் வேல்முருகன், இணைச்செயலாளர் சீனிவாசன், பொருளாளர் பிரசாந்த், பகுதி செயலாளர் பரத் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்த அன்னதானத்தைகோவிலுக்கு வருகைதந்த பக்தர்கள் மற்றும் ஏழை, எளியவர்கள் வாங்கி உண்டு மகிழ்ந்தனர்.

## திமுக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!




**வேலூர், நவ. 28:** வேலூர் மாவட்ட திமுக அலுவலகத்தில் இளைஞர் அணி செயலாளர் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர், இளைஞர்களின் எழுச்சி நாயகன் உதயநிதி ஸ்டாலினின் பிறந்த நாளை முன்னிட்டு வேலூர் மாவட்ட திமுக சார்பில் பொது மக்களுக்கு பிரியாணி வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. திமுக வேலூர் மாவட்ட செயலாளரும், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான ஏ. பி. நந்தகுமார் கேக் வெட்டி, திமுக கொடியை ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு பிரியாணி வழங்கினார். இதில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா, மாவட்ட துணை செயலாளர்கள் ஜி. எஸ்.அரசு, பிரதாப்குமார், முன்னாள் எம்எல்ஏ சி.ஞானசேகரன் மற்றும் ஒன்றிய, நகர, பகுதி,பேரூர் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், திமுக நிர்வாகிகள், தொண்டர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர். பொதுமக்கள் பிரியாணியை வாங்கி உண்டு விட்டு உதயநிதியை மனதார வாழ்த்திவிட்டு சென்றனர்.

## தேசிய அளவிலான பாலியல் வன்முறைக்கெதிரான பிரச்சாரம் பேரணி




**விளாத்திகுளம்,நவ.28 :** தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வட்டம் M.கோடாங்கிபட்டி இந்து தொடக்கப்பள்ளியில் தேசிய அளவிலான பாலியல் வன்முறைக்கெதிரான பிரச்சாரம் .தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக பேரணி 27.11.2025 நடைபெற்றது இதில் இந்து தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் திருமதி.வி.அமலா உதவி ஆசிரியர் திரு.ரா.ரமேஷ் பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் மகளிர் அமைப்பு சார்பாக திருமதி.சௌந்தர்யா விளாத்திகுளம் மகளிர் திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி.அனிதா பாலின வளமைய பொருளாளர் திருமதி.சித்ரா பஞ்சாயத்து கூட்டமைப்பு கணக்காளர் மற்றும் காலை உணவு பணியாளர்கள் ஆன திருமதி.சந்தோஷ் வேணி திருமதி.கவிதா காலை உணவு பணியாளர் கலந்து கொண்டனர்

## விளாத்திகுளத்தில் அரசியலமைப்பு தினத்தை முன்னிட்டு முகவுரை உறுதிமொழி ஏற்ற போட்டித் தேர்வு மாணவர்கள்






விளாத்திகுளத்தில் அரசியலமைப்பு தினத்தை முன்னிட்டு தென்காசி ஆகாச அகாடமியில் போட்டி தேர்வு மாணவர்கள் அரசியலமைப்பு முகவுரை உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

**விளாத்திகுளம்,நவ.28 :** விளாத்திகுளத்தில் அரசியலமைப்பு தினத்தை முன்னிட்டு போட்டி தேர்வு மாணவர்கள் இந்திய அரசியலமைப்பு முகவுரை உறுதிமொழி ஏற்றுக்கொண்ட விழா நடைபெற்றது. இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொண்டு 76 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு நாடு முழுவதும் இந்திய அரசியலமைப்பை பெருமைப்படுத்தும் விதமாக பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. இதில் ஒருபகுதியாக விளாத்திகுளம் தென்காசி ஆகாஷ் அகாடமி சார்பில் நடந்த இந்திய அரசியலமைப்பு முகவுரை உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியில் போட்டி தேர்வு மாணவர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பார்க்காமல் மனப்பாடமாக உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். இதனைத்தொடர்ந்து வழக்கறிஞர் ராஜேஷ்வரி இந்திய அரசியலமைப்பின் தோற்றம் அரசியலமைப்பில் உள்ள முக்கிய சட்டங்கள் மற்றும் அரசியலமைப்பின் சிறப்பு அம்சங்கள் பற்றி சிறப்புரையாற்றினார்.

## மனரீதியிலான தொல்லை கொடுத்த கணவர்

# திருமணமான 7 மாதத்தில் புதுப்பெண் எடுத்த விபரீத முடிவு



**பெங்களூரு, நவ.28:** கர்நாடக மாநிலம் சிவமொக்கா மாவட்டம் சிகாரிபுரா தாலுகா திண்டதஹள்ளி கிராமத்தை சேர்ந்தவர் லதா (வயது 23). இவருக்கு, பத்ராவதி தாலுகா ஒலேஒன்னூர் போலீஸ் எல்லைக்கு உட்பட்ட ஹன்சின சித்தாபுராவை சேர்ந்த குருராஜ் என்பவருடன் கடந்த ஏப்ரல் மாதம் 14-ந் தேதி திருமணம் நடைபெற்றது. இந்நிலையில், திருமணமான சில நாட்கள் தம்பதியினர் மகிழ்ச்சியாக இருந்துள்ளனர்.

பின்னர், லதாவை குருராஜ் தனது குடும்பத்தினருடன் சேர்ந்து கொடுமைப்படுத்தியும், மனரீதியிலான தொல்லைகளும் கொடுத்து வந்துள்ளார். இந்நிலையில், நேற்று முன்தினம் லதாவிடம் இருந்து செல்போன் அழைப்பு ஏதும் வராததால், அவரது பெற்றோர் குருராஜின் வீட்டுக்கு சென்றுள்ளனர். அப்போது லதா அங்கு இல்லை என தெரியவந்தது.

இதனால், சந்தேகமடைந்த லதாவின் பெற்றோர், தங்கள் மகளை காணவில்லை என ஒலேஒன்னூர் போலீசில் புகார் அளித்தனர். அந்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து லதாவை தேடினர். மேலும், லதாவின் செல்போன் சிக்னலை வைத்து அவரை போலீசார் தேடி வந்தனர்.

அப்போது கடைசியாக அவரது செல்போன் சிக்னல், பத்ராவதி நீர்ப்பாசன கால்வாய் பகுதியில் துண்டிக்கப்பட்டு இருந்தது தெரியவந்தது. அங்கு சென்று போலீசார் ஆய்வு நடத்தியபோது, நீர்ப்பாசன கால்வாயின் கரையோரம் லதாவின் செல்போன், காலணிகள் கிடந்தன.

இதையடுத்து, செல்போனை போலீசார் கைப்பற்றினர். அதில், எனது கணவர் மற்றும் அவரது குடும்பத்தினர் கொடுமையால் நான் கால்வாயில் குதித்து தற்கொலை செய்து கொள்கிறேன் என இருந்தது. இதையடுத்து, ஒலேஒன்னூர் போலீசார், தீயணைப்பு படையினரை வரவழைத்து, நீர்ப்பாசன கால்வாயில் ரப்பர் படகுகள் மூலம் லதாவின் உடலை தீவிரமாக தேடி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழா: பூத வாகனத்தில் சந்திரசேகரர் வீதிஉலா

**திருவண்ணாமலை, நவ.28:** திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் கார்த்திகை தீபத்திருவிழா கடந்த 24-ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. விழாவின் 2-ம் நாள் உற்சவமாக நேற்று முன்தினம் இரவு பஞ்ச மூர்த்திகளான விநாயகர், வள்ளி தெய்வானையுடன் சுப்பிரமணியர், பராசக்தி அம்மன் ஆகியோர் வெள்ளி விமானங்களிலும், உண்ணாமலை அம்மன் சமேத அருணாசலேஸ்வரர் வெள்ளி இந்திர வாகனத்திலும், சண்டிகேஸ்வரர் மர விமானத்திலும் எழுந்தருளி மாடவீதியை வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

3-ம் நாளான நேற்று காலை 10 மணியளவில் விநாயகரும், அம்பாளுடன் சந்திரசேகரரும் அருணாசலேஸ்வரர் கோவிலில் உள்ள திருக்கல்யாண மண்டபத்தில் சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளினர். அங்கிருந்து வந்து ராஜகோபுரம் எதிரே உள்ள 16 கால் மண்டபத்தில் தயாராக இருந்த மூஷிக வாகனத்தில் விநாயகரும், பூத வாகனத்தில் அம்பாளுடன் சந்திரசேகரரும் எழுந்தருளினர். அங்கு சாமிக்கு பூஜைகள் நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

பின்னர் மேள தாளங்கள் முழங்க விநாயகரும், அதன்பின்னர் சந்திரசேகரரும் கோவிலில் இருந்து பக்தர்கள் வெள்ளத்தில் மாடவீதிகளை வலம் வந்து அருள்பாலித்தனர். மாட வீதிகளில் வசிப்பவர்கள் தங்கள் வீடுகளின் அருகே சாமி வந்ததும் தேங்காய் உடைத்து கற்பூரம் ஏற்றி வழிபட்டனர்.



மேலும் கோவிலில் 1008 சங்குகளில் புனித நீர் நிரப்பப்பட்டு சிறப்பு யாகசாலை பூஜை நடந்தது. தொடர்ந்து காலையில் 1008 சங்காபிஷேகம் நடைபெற்றது. இதிலும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

தீபத் திருவிழாவின் 3-ம் நாள் விழாவின் போது பக்தர்கள் காணிக்கை செலுத்துவதற்காக பிரார்த்தனை உண்டியல் வைக்கப்படும். அதன்படி 3-ம் நாள் விழாவான நேற்று காலை கோவிலில் பிரார்த்தனை உண்டியல் கோவில் கொடிமரம் அருகில் வைக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் நகர முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு உண்டியலில் காணிக்கை செலுத்தினர். தொடர்ந்து பக்தர்கள் பலர் பிரார்த்தனை உண்டியலில் காணிக்கை செலுத்தினர். மேலும் கோவில் கலையரங்கத்தில் அரசு பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், பரதநாட்டியம், பக்தி சொற்பொழிவு போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இரவு 10 மணியளவில் நடைபெற்ற உற்சவத்தில் பஞ்சமூர்த்திகளான விநாயகர், வள்ளி தெய்வானையுடன் முருகர், உண்ணாமலை அம்மன் சமேத அருணாசலேஸ்வரர், பராசக்தி அம்மன், சண்டிகேஸ்வரர் ஆகியோர் சிம்ம வாகனம் மற்றும் வெள்ளி அன்ன வாகனத்தில் எழுந்தருளி கோவில் மாடவீதிகளை சுற்றி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.



# தினம் ஒரு குறள்

**பகைபாவம் அச்சம் பழியென நான்கும்**
**இகவாவாம் இல்லிறப்பான் கண்.** - குறள் 146

పగయు, భయము, నింద, పాపమ్ము నాలుగు
పరసతులను గోరువానితోడు - కురల్ 146

पाप, शत्रुता, और भय, निन्दा मिल कर चार ।
ये उसको छोड़ें नहीं, जो करता व्यभिचार ॥ - कुराल 146

Pakaipaavam Achcham Pazhiyena Naankum
Ikavaavaam Illirappaan Kan - Kural 146

## தொடர் பைக் திருட்டு

# 4 இளஞ்சிறார்கள் உட்பட 5 பேர் கைது

**7 பைக்குகள் பறிமுதல்**



**கன்னியாகுமரி, நவ.28:** கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக நாகர்கோவில் தக்கலை, கன்னியாகுமரி பகுதிகளில் பைக் திருட்டு புகார்கள் தொடர்ந்து வந்த வண்ணம் இருந்தது. இந்த புகார்கள் சம்பந்தமாக உடனடியாக குற்றவாளிகளை கண்டறிந்து கைது செய்ய மாவட்ட எஸ்.பி. ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார்.

அதன்பேரில் நாகர்கோவில் உட்கோட்ட டி.எஸ்.பி. சிவசங்கரன் மேற்பார்வையில், சப்-இன்ஸ்பெக்டர் அஜய்ராஜா ஆகியோர் தலைமையில் தனிப்படை போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

அதில் இந்தத் தொடர் பைக் திருட்டில் ஈடுபட்டது திருநெல்வேலி மாவட்டம் கோட்டையடி பகுதியை சேர்ந்த கண்ணன் மகன் மாரியப்பன் (வயது 22) மற்றும் நான்கு 18 வயதிற்கு உட்பட்ட இளஞ்சிறார்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து அவர்கள் 5 பேரையும் போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 7 பைக்குகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இந்த பைக்குகள் கன்னியாகுமரி மாவட்டத்தின் பல்வேறு காவல் நிலையங்கள் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள காவல் நிலைய வழக்குகளில் சம்பந்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒசூரில் விமான நிலையம்

# ஆலோசகர்களை தேர்ந்தெடுக்க ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை வெளியிட்ட தமிழக அரசு



**சென்னை, நவ.28:** கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் நகரமானது தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுகிறது. சர்வதேச நிறுவனங்கள் பலவும் கால்தடம் பதித்து வருகின்றன. இதற்கேற்ப ஒசூரின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஒசூரில் பிரம்மாண்ட தொழில் நகரை கட்டமைக்க டாடா குழுமம் முன்வந்து உள்ளது.

மேலும் 2,000 ஏக்கர் பரப்பளவில் ஒசூரில் சர்வதேச விமான நிலையம் அமைக்கப்படும் தமிழக அரசு அறிவித்து உள்ளது. இந்த விமான நிலையம் அமைந்தால் பெங்களூரு மற்றும் ஒசூர் ஆகிய 2 நகரங்களுக்கு வர்த்தக ரீதியாக பயனுள்ளதாக இருக்கும் என கூறப்படுகிறது.

இதுதொடர்பாக தமிழக அரசு முன்வைத்த கோரிக்கைகளின் அடிப்படையில் ஒசூருக்கு உள்ளேயும், வெளியேயும் 5 இடங்கள் குறித்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு முன்னெடுப்புகளை இந்திய விமான நிலைய ஆணையம் மேற்கொண்டு வந்தது. இதில் தனியார் ஏர்ஸ்ட்ரிப் நிறுவனமான டனேஜா ஏர்ஸ்பேஸ் மற்றும் ஏவியேஷன் லிமிடெட் இணைந்து தளங்கள் தொடர்பான ஆய்வு செய்தது.

இந்த ஆய்வில் தேர்வு செய்யப்பட்ட 5 தளங்கள் தொடர்பான அறிக்கையை இந்திய விமான நிலைய ஆணையம் குழு கடந்த சில மாதங்களுக்கு முன்பு அனைத்து தளங்களையும் பார்வையிட்டதாகவும், ஒவ்வொரு தளத்தின் நன்மை தீமைகளுடன் கூடிய ஆய்வு அறிக்கையை தமிழக அரசிடம் சமர்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதை தொடர்ந்து விரைவில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) மற்றும் இந்திய விமான நிலைய ஆணையம் பேச்சுவார்த்தை நடத்திருப்பதாகவும் அதில் 5 தளங்களில் இருந்து 2 தளங்களை ஆய்வு செய்து, பின்னர் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என கூறப்பகிறது.

இந்த நிலையில், ஒசூரில் பசுமை விமான நிலையம் அமைப்பதற்கான ஆலோசனைகளை வழங்குவதற்காக ஆலோசகர்களை தேர்ந்தெடுப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. ஆலோசகர்களின் ஆலோசனையின் அடிப்படையில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய விமான போக்குவரத்து அமைச்சகத்திடம் விண்ணப்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

# கயத்தாறில் பயங்கரம்: டாஸ்மாக் பாரில் புகுந்து 2 பேர் வெட்டிக்கொலை

**உறவினருக்கு போலீஸ் வலைவீச்சு**



**தூத்துக்குடி, நவ.28:** தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு அருகே காப்புலிங்கம்பட்டியைச் சேர்ந்தவர் கோமு (வயது 58). விவசாயியான இவர் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, சுமார் 18 ஆண்டுகள் சிறையில் இருந்த பின்னர் சமீபத்தில் விடுதலையானார். பின்னர் கோமு தனது வீட்டுக்கு சென்று விவசாயம் செய்து வந்தார். அவருக்கும், அவருடைய மனைவி தங்கத்தாய்க்கும் இடையே அடிக்கடி குடும்ப தகராறு ஏற்பட்டது. இதனால் தங்கத்தாய் கணவரை விட்டு பிரிந்து மகன் மாடசாமி வீட்டுக்கு சென்றார்.

இதற்கு தங்கத்தாயின் சகோதரரான விவசாயி முருகன்(56) தான் காரணம் என்று கருதிய கோமு, அவர் மீது ஆத்திரத்தில் இருந்தார். நேற்று முன்தினம் இரவில் முருகனும், அவருடைய தங்கை மாரியம்மாள் கணவரான விவசாயி மந்திரம்(55) என்பவரும் கயத்தாறு அருகே தளவாய்புரம் டாஸ்மாக் கடை பாருக்கு சென்றனர்.

அப்போது அங்கு வந்த கோமு அரிவாளால் மைத்துனர் முருகனை வெட்டியதாக கூறப்படுகிறது. இதனை தடுக்க முயன்ற மந்திரத்தையும் சரமாரியாக வெட்டினார். இதில் படுகாயமடைந்த 2 பேரையும் சிகிச்சைக்காக கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு சிகிச்சை பலனின்றி முருகன் பரிதாபமாக உயிரிழந்தார்.

மந்திரத்துக்கு முதலுதவி சிகிச்சை அளித்து, மேல் சிகிச்சைக்காக நெல்லை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனாலும் சிகிச்சை பலனின்றி நேற்று காலையில் அவர் பரிதாபமாக உயிரிழந்தார். பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இரட்டைக்கொலை குறித்து கயத்தாறு போலீசார் வழக்குப்பதிவு செய்து, தலைமறைவான கோமுவை வலைவீசி தேடி வருகின்றனர்.

கொலையான முருகனுக்கு வெள்ளத்துரைச்சி என்ற மனைவியும், ராமமூர்த்தி என்ற மகனும் உள்ளனர். ராமமூர்த்தி, கோவையில் போலீஸ்காரராக பணியாற்றி வருகிறார். இவருடைய மனைவி கோவையில் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டராக உள்ளார். கொலையான மந்திரத்துக்கு மாரியம்மாள் என்ற மனைவியும், மல்லிகா, காப்புதுரைச்சி ஆகிய 2 மகள்களும், மகேஷ் என்ற மகனும் உள்ளனர். கோமுவின் மனைவி தங்கத்தாயும், மாரியம்மாளும் அக்காள்-தங்கை. இவர்களுடைய சகோதரர் முருகன் ஆவார்.

டாஸ்மாக் கடை பாருக்குள் அரிவாளுடன் புகுந்த கோமு தனது மைத்துனர் முருகனையும், மனைவியின் தங்கை கணவர் மந்திரத்தையும் சரமாரியாக வெட்டிக்கொலை செய்தது அங்குள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவாகி இருந்தது. காண்போரை பதறச் செய்யும் இந்த காட்சி சமூக வலைதளங்களில் வைரலாக பரவி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

# மதுரையில் துப்பாக்கியால் சுட்டு காவலர் தற்கொலை

**மதுரை, நவ.28:** ஐகோர்ட் மதுரை கிளை வளாகத்தில் பாதுகாப்பு பணியில் இருந்த சிறப்பு காவல்படை காவலர் மகாலிங்கம் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார். அவர் அதிகாலை 3 மணியளவில் நீதிமன்ற வாசலில் தற்கொலை செய்துள்ளார்.

மதுரை மாவட்டம் எழுமலை கோட்டைப்பட்டியை சேர்ந்த மகாலிங்கம் தனது தற்கொலைக்கு காரணம் யாரும் இல்லை என கடிதம் எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்துள்ளார்.

பாதுகாப்பு பணியில் இருந்த காவலர் மகாலிங்கம் தற்கொலை செய்ததற்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.







# அரசுப் பள்ளிகளில் 'காக்கா முட்டை' திரைப்படம்: பள்ளிக்கல்வித்துறை உத்தரவு





**சென்னை, நவ.28:** பள்ளிக்கல்வித் துறை சார்பில், அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

அரசுப் பள்ளிகளில் மாதந்தோறும் 6 முதல் 9-ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு சிறார் திரைப்படம் திரையிடப்பட்டு வருகிறது. அதன்படி நடப்பு மாதம் 'காக்கா முட்டை' எனும் தமிழ் திரைப்படம் ஒளிபரப்பு செய்யப்பட உள்ளது. 2014-ல் இயக்குனர் மணிகண்டன் இயக்கத்தில் வெளிவந்த இந்த படம் சென்னையில் குடிசைவாழ் பகுதியில் வசிக்கும் 2 சிறுவர்கள் பற்றிய கதையாகும். இந்த படத்தை ஒளிபரப்பு செய்வதற்கான இணைப்பு 'லிங்க்' பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அதற்குரிய பாடவேளைகளில் படத்தை திரையிட வேண்டும். இந்த பணிகளை கண்காணித்து ஒருங்கிணைக்க பள்ளிகளில் பொறுப்பாசிரியர்களை நியமிக்க வேண்டும். பொறுப்பு ஆசிரியர் படம் திரையிடும் முன்பு அந்த படத்தை பார்க்க வேண்டும். அதன்பின் கதைச் சுருக்கத்தையும் படித்து மாணவர்களுக்கு படத்தின் அடிப்படை பின்னணியை விளக்க வேண்டும். இதுசார்ந்த வழிகாட்டுதல்களை முழுமையாக பின்பற்றி படத்தை மாணவர்களுக்கு திரையிட்டு காண்பிக்க வேண்டும்.

மாநில அளவில் நடைபெறும் சிறார் திரைப்பட விழாவில் சிறந்து விளங்கும் 25 மாணவர்கள் வெளிநாடுகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவார்கள். இதற்கான அறிவுறுத்தல்களை பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகள் வழங்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ராமேஸ்வரம் - திருப்பதி சிறப்பு ரயில்



**மதுரை, நவ.28:** ராமேஸ்வரம் - திருப்பதி இடையே மதுரை வழியாக சிறப்பு ரயிலை தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

டிச., 2, 9ல் மாலை 4:30 மணிக்கு ராமேஸ்வரத்தில் இருந்து புறப்படும் சிறப்பு ரயில் (06080), மறுநாள் காலை 10:10 மணிக்கு திருப்பதி செல்லும். மறுமார்க்கத்தில் டிச., 3, 10ல் காலை 11:55 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06079), மறுநாள் அதிகாலை 4:45 மணிக்கு ராமேஸ்வரம் செல்லும்.

மண்டபம், ராமநாதபுரம், பரமக்குடி, மானாமதுரை, மதுரை, கொடைரோடு, திண்டுக்கல், திருச்சி, தஞ்சை, பாபநாசம், கும்பகோணம், மயிலாடுதுறை, சீர்காழி, சிதம்பரம், திருப்பாதிரிப்புலியூர், விழுப்புரம், திருவண்ணாமலை, ஆரணி ரோடு, வேலூர், காட்பாடி வழியாக செல்லும். 3 'ஏசி' மூன்றடுக்கு படுக்கை வசதி பெட்டிகள், 9 'ஸ்லீப்பர்' பெட்டிகள், 4 பொது பெட்டிகள், 2 சரக்கு பெட்டிகளுடன் இயக்கப்படும்.

இதற்கான முன்பதிவு இன்று (நவ., 27) காலை 8:00 மணிக்கு துவங்குகிறது.

# கவிதை அரங்கம்!



முட்களையும் ரசிக்க
கற்றுக்கொள் வலிகளும்
பழகிப்போகும்...

முயன்று பார்ப்பதில் பிழை
ஏதும் இல்லையே நண்பா!
வா... மீண்டும் ஒருமுறை
மட்டும்!

தடைகள் பல வந்தாலும்...
தாவி சென்று ஓடு.....
சோதனை காலத்தை
தூக்கி போட்டு விட்டு....
சாதனை காலத்தை
நோக்கி அடி எடுத்து
வை.....

உயிர் போகும்
தருணத்திலும்....
சாதனை என்ற ஒன்று
இல்லாமல் ஒரு அடி
எடுத்து வைக்க முன்
வராதே...

நீ.. யார் ? என்று
இவ்வுலகிற்கு காட்டும்
நாட்கள் வெகு தூரத்தில்
இல்லை... கூடிய விரைவில்
உள்ளது....

## பொருத்திக் கொள்ள முயன்று...



எல்லா இடத்திலும் உங்களை பொருத்திக் கொள்ள முயன்று கொண்டே இருக்காதீர்கள்...

சில நேரங்களில், ஒரு அடி பின் வாங்கி தனியாக நின்று பார்த்தால்தான் நீங்கள் யார் என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

உங்கள் அமைதிக்கும் மதிப்புக்கும் அழகு சேர்க்கும் இடங்களும் மனிதர்களும் இருக்கிறார்கள்...

அதை போல, உங்கள் ஒளியை மங்கச் செய்யும் இடங்களும் இருக்கின்றன.

அதனால், சரியில்லாத இடங்களில் பொருந்த போராடாதீர்கள்...

சில இடங்களில் தனியே தள்ளி நின்று பாருங்கள்
உங்களுக்கு எல்லாம் புரியும்..

வாழ்க வளமுடன்
என்றும் அன்புடன்

நன்றி - ஆனந்தி

# பூ மனம் !



பவானி, நகரில் நடக்கும் ஒரு ஃபங்ஷனுக்காக புறப்பட்டாள். கோமதி அம்மாளின் வீட்டை தாண்டிச் செல்லவேண்டி யிருந்தது. அவர் வீட்டை நெருங்கிய சமயம் ஏதேதோ யோசனையில் இருந்தவள் அந்தக் காட்சியைக் கண்டு ஆத்திரமடைந் தாள்.

உடனே சட்டென கோமதி அம்மாளின் வீட்டில் நுழைந்து அழைப்பு மணியை அழுத்தினாள். சில வினாடிகளில் கதவைத் திறந்து பார்த்த கோமதி அம்மாள் முகம் மலர்ந்து , " வா பவானி ! எங்க இவ்வளவு தூரம் ?" என்றார்.

" ஒரு ஃபங்ஷனுக்காக போய்கிட்டி ருக்கேன். ..ஆன்டி ! கொஞ்சம் வெளியே வாங்க ! வந்து நடக்குற அநியாயத்தை உங்கக் கண்ணால் பாருங்க."

பவானி அழைக்க ஒன்றும் புரியாமல் வெளிப்பட்டார் கோமதி அம்மாள்.

" ஆன்டி ! அங்கப் பாருங்க ! உங்க வீட்டுல பூத்திருக்குற செவ்வரளி பூக்கள யாரோ பரிச்சுக்கிட்டுப் போறாங்க ! " பவானி கை நீட்டி காட்ட, ஒரு பெரியவர் பூ பறித்த கையோடு நடையைக் கட்டினார்.

" இவ்வளவுதானா ! நான் என்னவோ ஏதோன்னு பயந்து போயிட்டேன் !" வெகுகூலாக கூறிய கோமதி அம்மாளை வியப்புடன் பார்த்த பவானி , " என்ன ஆன்டி, இப்படிசொல்லிட்டீங்க ? எவ்வளவு கஷ்டப்பட்டு வளக்கறீங்க ! பலனை யாரோ அனுபவிக்கிறாங்க ! இது அநியாயமில்லையா ?" என்றாள் மனசு தாளாமல்.

கோமதி முறுவலித்தார். " பவானி ! நான் பூக்கள் வளர்க்கறதே மத்தவங்களுக்காகத்தான் ! "

பவானி புருவம் நெருக்கியபடி கோமதி அம்மாளையே கண் கொட்டா மல் பார்த்த வண்ணம் நின்று கொண்டிதாள்.

கோமதி தொடர்ந்தார்.

" யெஸ்...ஆரம்பத்தில பூத்தொட்டி , பூங்கன்று வாங்க கொஞ்சம் செலவு. அவ்வளவுதான். அதுக்கப்புறம் தினமு ம் தண்ணீர் ஊற்றினால் அதுபாட் டுக்கு வளரும். நல்லா வளர்ந்து பூக்கள் பூக்கும். பூக்களை ரோடுல போறவங்க பறிச்சுக்கிட்டட்டும்னு விட்டுடுவேன். நீ இன்னிக்கு மட்டும் தான் பார்த்தே. தினமும் சில பேர் வருவாங்க. பூக்களைப் பறிச்சுக் கிட்டு போவாங்க. ஏதோ என்னாலமுடிஞ் சது...அதுல ஒரு சேடிஸ்ஃபாக்ஷ்ன். மன நிறைவும் கூட . இப்போ உனக்கு புரிஞ்சிருக்கும். நீ யூம் கன்வின்ஸ் ஆகியிருப்பே. ஆம் ஐ கரெக்ட் ?"

" யெஸ் ஆன்டி !" எனக் கூறிச் சிரித்த பவானிக்கு, கோமதி அம்மாளின் ' பூ மனம் ' புரிந்தது..

வி.கே.லட்சுமி நாராயணன்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

*ராமு: தற்காப்புக்காக என்னென்ன வித்தைகள் தெரிஞ்சு வச்சுருக்கீங்க?*

*சோமு: மாவு ஆட்டுறது, தோசை சுடுறது.. அடிக்க வந்தா ஓடுறது..*

*அவன்: எங்க அம்மா அப்பவே சொல்லுச்சு.. நான் தான் கேக்கல..*

*இவன்: என்ன சொன்னாங்க*

*அவன்: நான் தான் கேக்கலையே!*



# தினம் ஒரு சமையல்



## தக்காளி ரசம்

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| பழுத்த தக்காளி பழம் -2 | |
| புளி | -நெல்லிக்காய் அளவு |
| கொத்தமல்லி | -ஒரு கைப்பிடி அளவு |
| கருவேப்பிலை | -ஒரு கொத்து |
| தனியா விதை | -ஒன்றரை டீஸ்பூன் |
| சீரகம் | -ஒன்றரை டீஸ்பூன் |
| மிளகு | -ஒரு டீஸ்பூன் |
| வரமிளகாய் | -ஒன்று |
| பூண்டு | -10 பல் |
| வெந்தயம் | -பத்து எண்ணிக்கை |
| பெருங்காயத்தூள் | -கால் டீஸ்பூன் |
| மஞ்சள் தூள் - | கால் டீஸ்பூன் |
| உப்பு | -தேவையான அளவு |

செய்முறை:




இந்த தக்காளி ரசம் வைப்பதற்கு முதலில் தேவையான எல்லா பொருட்களையும் தயாராக எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். பெரிய நெல்லிக்காய் அளவிற்கு புளியை எடுத்து ஒருமுறை அலசி தண்ணீர் ஊற்றி ஊற வையுங்கள். ஒரு மிக்சர் ஜார் ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் முதலில் மல்லி விதைகள், மிளகு, சீரகம், ஒரு வரமிளகாய், பத்து வெந்தயம் ஆகியவற்றை சேர்த்து ஒரு முறை மிக்ஸியை இயக்கி அரைத்துக் கொள்ளுங்கள்.

ரொம்பவும் நைஸ் ஆக அரைக்க கூடாது. விழுது கொஞ்சம் கொரகொரவென்று இருக்க வேண்டும். பின்னர் பத்து பூண்டு பற்களை தோலுடன் அப்படியே சேர்த்து ஒரு சுற்று சுற்றி எடுங்கள். ஒன்றும் பாதியாக அரைப்பட்ட இந்த ரசப்பொடியை தனியாக எடுத்து வையுங்கள். இப்போது புளியை நன்கு கரைத்து அதில் இருக்கும் சாக்கையை எடுத்து விடுங்கள். ரெண்டு பழுத்த தக்காளி பழங்களை காம்பு பகுதியை நீக்கிவிட்டு நன்கு கழுவி சுத்தம் செய்து ஒன்றிரண்டாக நறுக்கி நன்கு கைகளால் புளி தண்ணீரில் சேர்த்து பிசைய வேண்டும். தேவையான அளவிற்கு தண்ணீர் ஊற்றிக் கொள்ளுங்கள்.

தக்காளியுடன் ஒரு கொத்து கருவேப்பிலை, அரை கைப்பிடி கொத்தமல்லியை நறுக்கி சேர்த்து பிசைந்து கொள்ளுங்கள். அப்போது தான் ருசி அபாரமாக இருக்கும். ரசத்திற்கு தேவையான புளி கரைசல் தயாரானதும் அதனுடன் சிறிதளவு மஞ்சள் தூள் சேர்த்துக் கொள்ளுங்கள். இப்போது அடுப்பில் வாணலி ஒன்றை வைத்து தாளிக்க தேவையானவற்றை எடுத்து வையுங்கள். எண்ணெய் விட்டு காய்ந்ததும் கடுகு போட்டு பொரிய விடுங்கள். கடுகு பொரிந்து வந்ததும் ஒரு கொத்து கருவேப்பிலை சேர்த்து, ஒரு வரமிளகாய், இரண்டு பச்சை மிளகாயை கீறி சேர்த்துக் கொள்ளுங்கள்.

## சிறுகுறிஞ்சா நன்மைகள்



மருந்துகள்: இந்த இலைகளை எப்படி பயன்படுத்தினாலும், பயன்கள் நிறைய கிடைக்கும்.. இலைகளில் டீ தயாரித்து குடிக்கலாம். கடைகளில் மாத்திரை வடிவத்திலும் கிடைக்கிறது. இந்த இலை பவுடர்களாகவும் கடைகளில் கிடைக்கிறது. ஆனால், உணவு சாப்பிடுவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்பு இந்த சிறுகுறிஞ்சானை 3 முதல் 5 கிராம் வரை சாப்பிட வேண்டும். இதனால் சர்க்கரை நோய் கட்டுக்குள் இருக்கும் என்று நம்பப்படுகிறது. அதேபோல, இன்சுலின் எடுத்துக் கொள்ளும்போதும், இந்த சிறுகுறிஞ்சானை சாப்பிடலாம். இதன்மூலமும் ரத்த சர்க்கரை அளவு வெகுவாக குறைக்க முடியும்.. இப்படி பல்வேறு நன்மைகளை இந்த மூலிகை தந்தாலும், டாக்டரின் முறையான ஆலோசனை இல்லாமல், சிறுகுறிஞ்சானை உட்கொள்ளவே கூடாது.

புற்றுநோய்: பிளவனாய்டுகள் இந்த இலையில் உள்ளதால், புற்றுநோய் செல்கள் நம்மை நெருங்குவதை தடுக்கிறது. முறையான மாதவிடாய் ஏற்படாவிட்டால், ஒரு கைப்பிடி சிறுகுறிஞ்சான் இலையுடன், களா இலைகளையும் 2 கைப்பிடி அளவு சேர்த்து அரைத்து, தினமும் 2 வேளை வெறும் வயிற்றில் சாப்பிடும்போது மாதவிடாய் குறைபாடுகள் நீங்கும்.. பிசிஓடி என்று சொல்லப்படும் நீர்க்கட்டிகளும் கரைந்துவிடும்.

குளிர்ச்சியை தரக்கூடிய சிறுகுறிஞ்சான் மூலிகையை, சூப் போல தயாரித்து குடிக்கலாம்., இதனால், உடல் உஷ்ணம், பித்தம் போன்றவை நீங்கும்.. சிறுகுறிஞ்சான் இலை பவுடரை, வெந்நீரில் கலந்து குடித்தாலே, உடல் குளிர்ச்சி பெறும். பித்தமும் தணியும்.. பசும்பாலில் இந்த பொடியை கலந்து குடித்து வந்தால், நரம்புத்தளர்ச்சி குறைபாடுகள் நீங்கும்.. நரம்புகள் வலிமையடையும்.

# சினிமா

## விஜய், அஜித்தால் கூட முடியவில்லை.. ஆனால், அதை செய்து காட்டிய சூர்யா.. கருப்பு படத்தின் ப்ரீ பிசினஸ்



சூர்யா நடிப்பில் அடுத்ததாக வெளிவரவிருக்கும் கருப்பு திரைப்படத்தை எதிர்பார்த்து ரசிகர்கள் அனைவரும் காத்திருக்கிறார்கள். இப்படத்தை இயக்குநர் ஆர்.ஜே. பாலாஜி இயக்கி முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் திரிஷா, சுவாசிகா, அனாகா ரவி, ஷிவதா என பலரும் இப்படத்தில் நடிக்கிறார்கள். சாய் அப்யங்கர் இப்படத்திற்கு இசையமைக்கிறார். ஏற்கனவே இப்படத்திலிருந்து வெளிவந்த டீசர் மற்றும் முதல் பாடல் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. அடுத்த ஆண்டு இப்படத்தை வெளியிட படக்குழு திட்டமிட்டு வருகிறார்கள்.

இந்த நிலையில், கருப்பு படத்தின் ப்ரீ பிசினஸ் குறித்து தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, கருப்பு படத்தின் சாட்டிலைட் உரிமையை மிகப்பெரிய தொகைக்கு ஜீ நிறுவனம் வாங்கியுள்ளது. சூர்யாவின் திரை வாழ்க்கையில் அதிக விலைக்கு விற்பனையான படமும் இதுவே என கூறுகின்றனர்.

இந்த ஆண்டு அதிக வசூல் செய்த அஜித்தின் குட் பேட் அக்லி, அடுத்த ஆண்டு வெளிவரவுள்ள விஜய்யின் ஜனநாயகன் ஆகிய படங்களின் சாட்டிலைட் உரிமை கூட இன்னும் விற்பனை ஆகாத நிலையில், சூர்யாவின் கருப்பு படத்தின் சாட்டிலைட் உரிமை விற்பனையாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



திருமணத்திற்கு பின்பும் நடிப்பதில் பிஸியாக வலம் வரும் ரகுல், கருப்பு நிற மாடர்ன் லுக்கில் இருக்கும் அழகிய லேட்டஸ்ட் போட்டோஸ் இணையத்தில் வைரலாகி வருகிறது. இதோ,

## 'சாரிப்பா இனிமே இப்படி பண்ணமாட்டேன்...' வெளியானது லாக்டவுன் படத்தின் டிரெய்லர்



நடிகை அனுபமா பரமேஷ்வரன் நடிப்பில் விரைவில் திரையரங்கிற்கு வர இருக்கும் படம் 'லாக் டவுன்'. லைகா ப்ரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் இந்த படத்தை அறிமுக இயக்குநரான ஏ.ஆர் ஜீவா இயக்கியுள்ளார்.

இப்படத்திற்கு ரகுநந்தன் மற்றும் சித்தார்த் விபின் ஆகியோர் இணைந்து இசையமைக்க சக்திவேல் ஒளிப்பதிவை மேற்கொண்டுள்ளார்.

இத்திரைப்படம் கொரோனா காலக்கட்டத்தில் நடந்த உண்மை சம்பவத்தை அடிப்படையாக கொண்டு எடுக்கப்பட்ட படமாகும். இப்படத்தின் பாடல் வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றது. இதனை தொடர்ந்து இத்திரைப்படம் அடுத்த மாதம் 5-ந்தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

இந்நிலையில், 'லாக் டவுன்' படத்தின் டிரெய்லரை நடிகர் விஜய் சேதுபதி வெளியிட்டுள்ளார். நடுத்தர குடும்பத்தை சேர்ந்த பெண்ணுக்கு ஏற்படும் பிரச்சனை அதன்பிறகு கொரோனாவால் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு என சுழலும் கதையில் அப்பெண்ணிற்கு ஏற்பட்ட பிரச்சனை என்ன? அதில் இருந்து அவர் எப்படி தப்பிக்கிறார் என்பதே இந்த டிரெய்லர் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com